# பேராயிரமும் ஓதுமின்கள்

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம அத்யாயத்தின் பெருமைக் குரிய ஆறு காரணங்களை ஸ்ரீபராசர பட்டர் இரண்டு ச்லோகத்தால் வெளியிடுகிறார். அந்த ச்லோகங்கள்

**"மஹாபாரத ஸாரத்வாத் ரிஷிபி : பரிக்ரஹத : |**
**வேதாசார்ய ஸமாஹாராத் பீஷ்மோத் க்ருஷ்டமதத்வத" :**
**"பரிக்ரஹாதிசயதோ ஹேத்வய வார்த்த தல்சந :**
**ஸஹஸ்ர நாம்நாமத்யாய : உபாதேயதமோமத :**

என்பனவை.

---

## K.B. தேவராஜன்

---

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம் மஹாபாரதத்தில் ஸாரமாக இருப்பதாலும் மஹரிஷிகளாலும் ஓதப்பட்டதாலும், வேதாசார்யரான ஸ்ரீவேதவ்யாசரால் தொகுக்கப் பட்டதாலும் பீஷ்மர் தமது திருவுள்ளத்தாலே மிக உயர்ந்தது என்று ஒப்புக் கொண்டமையாலும், பெரியோர்கள் பலராலும் அங்கீகாரம் செய்யப்பட்டமையாலும், வேத முதலான சாஸ்த்ரங்களின் அர்த்தத்தோடு ஒற்றுமை உள்ளபடியாலும் மிக உயர்ந்ததாகக் கொள்ளப்பட வேண்டியது. இதனைச் சற்று விவரிப்போம்.

1 மதிமந்த்தான மாவித்ய யேதாஸௌ ச்ருதிஸாகராத் ஜகத்திதாய ஜனிதோ மஹாபாரத சந்த்ரமா : "

ஸ்ரீவேதவ்யாசர் தமது புத்தி என்கிற மத்தைக் கொண்டு வேதம் என்னும் கடலைக் கடைந்து உலக நன்மைக் காக மஹாபாரதம் என்கிற சந்திரனை கொடுத்ததாகக் கூறப் பட்டுள்ளது. மஹாபாரதத்தின் ஸாரமே ஸஹஸ்ர நாமம் என்று கூறப்பட்டுள்ளதால் ஸஹஸ்ர நாமத்யாயம் ஸாராம்

சங்கவின் சுருக்கமாக சொல்லப்பட்டுள்ளது என்பது தெரிகிறதே. மேலும் இது சாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷம் பண்ண வந்ததா அல்லது ஸ்தோத்ரரூபமாக வந்ததா என்று ஸந்தேஹிக்க இடமில்லாமல் ஒரு பிரமாணத்துக்குரிய எல்லாவித இலக்கணங்களும் பொருந்தியதாக அமைந்துள்ளது. ஆகவே இது மஹாபாரதத்தின் ஸாரம்.

2 மஹரிஷிகளால் ஓதப்பட்டுள்ளது :—

வேதவேதாந்தார்த்தங்கள் எல்லாவற்றையும் நேராகக் கண்டறிந்தவர்களான ஸநகர், ஸநத்குமாரர், நாரதர் முதலானவர்கள் மஹரிஷிகளாவர். எம்பெருமானுக்குப் பல்லாயிரக் கணக்கான திருநாமங்கள் வேதங்களில் கூறப் பட்டுள்ளன. அவற்றுள் ஓராயிரத்தை இம் மகரிஷிகள் நாமங்களின் அர்த்தங்களையும் அவற்றின் தத்வங்களையும் நன்கு அறிந்து கீர்த்தனம் பண்ணினர்.

''யாநிநாமாநி கௌணாநி விக்யாதாநி மஹாத்மந :
ரிஷிபி : பரிகீதாநி தாநிவக்ஷ்யாமி பூதயே''

என்கிற சுலோகமும் அனைவரும் அறிந்ததே.

3 வேதவ்யாஸரால் தொகுக்கப்பட்டது :—ஸ்ரீவேத வ்யாசர் வேதாசார்யராக அவதரித்தபடியால் அவரது ஜ்ஞானம் மிகச்சிறந்த ஞானமாகும். அவருடைய ஜ்ஞானத் தில்இருள், துயக்கு, மயக்கு, மறப்பு என்பதற்கே இடமில்லை அவர் கலியுகத்தில் சக்தி குறைந்துள்ள மக்களிடத்தில் அநுக்ரஹம் வைத்து வேதங்களை வகுத்து அதில் அறிய வேண்டிய விஷயங்களில் அஜ்ஞானம், ஐயம், திரிபு, இவற்றை நீக்க வேண்டி ''பாரத: பஞ்சமோவேத:'' என்று சொல்லப் படும் படியான ஐந்தாம் வேதமான மஹாபாரதத்தை இயற்றினர். இதைத் தவிர இவருக்கு பரம்பரையாகவே வருமொரு பெருமையும் உண்டு. அதாவது க்ஷத்ரிய ஜாதி யில் பிறந்த விச்வாமித்ரரை ப்ராம்மணராகும் படியாகச்

செய்த ஸ்ரீ வசிஷ்ட பகவானுடைய பேரரான பராசரரின் குமாரராவார். வியாசரின் தனியனாக 'வியாசம் வசிஷ்ட நப்தாரம் ஶக்தேப் பௌத்ர மகல்மஷம் 'பராசராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம்'' என்றுள்ள ச்லோகத்திலிருந்து இதனை நன்கு அறியலாம்.

இப்படிப்பட்ட வியாசர் ஸநகாதி முனிவர்கள் கானம் பண்ணிய எம்பெருமானின் திருநாமங்களைத் தொகுத்துக் கூறியிருப்பதால் இந்த ஸஹஸ்ர நாமம் ஏற்றுக் கொள்ளத் தக்கது.

4 பீஷ்மர் தம்முடைய திருவுள்ளத்தால் சிறந்ததென்று ஒப்புக் கொண்டது.—

வேதவ்யாசர் தர்மபுத்ரரை நோக்கித் தர்மங்கள் அனைத்தையும் கேட்க உனக்கு விருப்பமாயின் குரு விருத்த பிதாமஹரும் பெரியவருமான பீஷ்மரிடத்தில் சென்றால் ஸகல ஸூக்ஷ்ம விஷயங்களிலும் உனக்குள்ள ஸந்தேஹங்களை அவர் நீக்கி விடுவார். அவர் இந்திராதி தேவர்களை நேராகக் கண்டவர் என்று கூறியுள்ளார் ஸ்ரீ க்ருஷ்ணனும் கூட "பீஷ்மர் தற்போது ஶரதல்பத்தில் படுத்து அக்கினி ஆறுவதுபோல் அந்திம தசையில் இருக்கிறார். புருஷர்களிற் சிறந்தவரான அவர் என்னை த்யானம் செய்து கொண்டிருக்கிறார். அதனால் என்னுடைய மனமும் அவரை அடைந்துள்ளது. மஹாதேஜஸ்வியும் புத்திமானுமான அவர் அஸ்த்ரங்களையும் நான்கு வேதங்களையும் வேதாங்கங்களையும் மனதிற் கொண்டிருப்பவர். அவரை நான் இப்போது மனதால் அடைந்துள்ளேன் அவர் எதிர், நிகழ் கழி காலங்களை அறிந்திருப்பவர், குருவம்சத்தின் தலைவரான அந்த பீஷ்மர் அஸ்தமித்துவிட்டால் ஜ்ஞானங்கள் குறைந்து போய்விடும. ஆகவே அவரிடமிருந்து அர்த்தங்களைத் தெரிந்து கொள்ள உங்களைத் தூண்டுகிறேன்'' என்று தர்மபுத்ரரிடம் கூறியுள்ளார். அந்த நியமனத்தின்படி தர்மபுத்ரர் உள்ளிட்ட அனைவரும் பீஷ்மரிடம் சென்று அர்த்தங்களையெல்லாம் கேட்கின்றனர்.

''தத்வார்த்தங்களை அறியவேண்டும் என்று கேட்கிற இந்த தருமருக்கு நீர் சொல்லும் வார்த்தைகள் எல்லாம் வேத வாக்யங்கள் போல் பூமியில் நிலையாக நிற்கப் படுகின்றன'' என்றும் கண்ணன் கூறியுள்ளான். அப்படிப்பட்ட பீஷ்மரிடம் எல்லா தர்மங்களையும் கேட்ட தர்மபுத்ரர்.

| | | |
|---|---|---|
| 1 | ''கிமேகம் தைவதம் லோகே'' | சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள ஒப்புயர்வற்ற கடவுள் யார்? |
| 2. | கிம்வாப் யேகம் பராயணம் | எல்லாவற்றுக்கும் மேலான அடையத் தக்கது (புருஷார்த்தம்) எது? |
| 3. | ஸ்துவந்த: கம் | யாரைத் துதித்து மனிதர்கள் சுபத்தை அடைவார்கள்? |
| 4. | கமர்ச்சந்த : | யாரை அர்ச்சித்து மனிதர்கள் நன்மை அடைவார்கள்? |
| 5 | கோதர்மஸ்ஸர்வதர் மாணும் பவத: பரமோமத : | எல்லாத் தருமங்களைக் காட்டிலும் சிறந்த தர்மமாக தேவரீர் திருவுள்ளத்தால் அபிமானித் துள்ள அர்த்தம் எது? |
| 6 | கிம்ஜபன் முச்யதே ஜந்து: ஜன்ம ஸம்ஸார பந்தனாத் | எதனை ஜபிப்பதால் மனிதன் ஜன்ம ஸம்ஸாரம் இவற்றின் கட்டு களிலிருந்து விடுபடுவான்? |

என்னும் இவ்வாறு கேள்விகளைக் கேட்டார். இவற்றில் ஐந்தாவது கேள்வி உயிரான கேள்வி. பீஷ்மரே! தேவரீருடைய திருவுள்ளத்தால் உயர்ந்ததென நினைத்திருக்கிற தர்மம் எது? என்கிறார். அதனைச் செவியுற்ற பீஷ்மரும்,

''ஏஷமே ஸர்வதர்மாணாம் தர்மோதிக தமோமத:''
''இதுதான் எல்லாத் தர்மங்களைக் காட்டிலும் சிறந்த தர்மம் என்று நான் நினைக்கிறேன்''—என்று தொடங்கி இந்த ஸஹஸ்ரநாமத்தை உபதேசித்திருக்கிறார். ஒரு ஆசாரியருக்கு ஆயிரமாயிரம் அர்த்தங்கள் தெரிந்திருக்கலாம். ஆனால் சிஷ்யர்களுக்கு, ஆசார்யர் தம் திருவுள்ளத்தால் எதனை உயர்ந்த அர்த்தமாகக் கொண்டிருக்கிறாரோ, அதுவே அறிந்து உய்வதற்கு உயர்ந்த அர்த்தமாகும். ஆகவே ஆசார்ய ருசி பரிக்ருஹீதமான அர்த்தமே சிஷ்யர்களுக்குக் கைக் கொள்ள வேண்டியவொன்றாகும். இந்த ஸஹஸ்ர நாமத்தை யும பீஷ்மர் தமது உயர்ந்த தர்மமாகக் கூறியுள்ளமையின் அதனால உண்டான ஏற்றமும இதற்குண்டு.

5. இந்த ஸஹஸ்ர நாமம் பெரியோர்கள் பலராலும் கைக் கொள்ளப்பட்டுள்ளது, அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீவிஷ்ணு தர்மத்தில ''ஸஹஸ்ர சுபநாமாநி ஆதிதேவம் அஜம்புவிம்'' ஆயிரம் பெயர்களையுடையவன் என்று கூறப்படுள்ளது ஸ்ரீ கஜேந்த்ரமோக்ஷப்ரகரணத்திலும் மற்றும் மருத்துவ நூல் கள முதலானவற்றிலும் ஸஹஸ்ர நாமத்தின் பெருமை பேசப் பட்டுள்ளது.

''விஷ்ணும் ஸஹஸ்ர மூர்த்தாநாம் சராசர பதிம் விபும் |
ஸ்துவந்நாம ஸஹஸ்ரேண ஜ்வரான் ஸர்வான்வ்யபோஹதி''

ஆயிரம் தலையுடையவரும், சராசரங்களுக்குத் தலைவனுமிருப் பவனுமான விஷ்ணுவை ஸஹஸ்ர நாமத்தினால் ஸ்தோத்ரம் பண்ணுவதால் எல்லாவித ஜ்வரங்களும் நீங்கும் என்று

ஆயுர்வேத சாஸ்த்ரங்களிலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது. பட்டபாணன் என்கிற ஸம்ஸ்க்ருத கவிகாதம்பரியில் ப்ரஸவ அறையை வர்ணிக்கும் போது ''அவிச்சின்னபட்யமான நாராயண நாம ஸஹஸ்ரம்''—'நாராயணரின் ஆயிரம் திருநாமங்களை இடைவிடாது படிக்கின்றனர்'' என்றும் கூறியுள்ளார். சாந்தி ப்ராயச்சித்தம் முதலான வற்றிலும் இது விளியோகம் கொள்ளப் படுவதைக் கண்கூடாகக் காண்கிறோம். இதனை யாவரும் பெண்டிர் பேதையர், ப்ராஹ்மண அப்ராஹ்மணர்கள் என்கிற வேறுபாடின்றி அனைவரும் ஓதலாம். ஆகவே வேதத்தினைக் காட்டிலும் இதற்கு அங்கீகாரம் அதிகம் உண்டு. இதனால் பரிக்ரஹாதிசயம் இதற்கு உண்டு என்னும் பெருமையும் சேருகிறது.

6. ஸ்ரீ ஸஹஸ்ர நாமாத்யாயம் பகவத் கீதை மற்றும் மஹாபாரதத்தில் சித்தாந்தங்களாக இருக்கும் நாராயணீயம், ஸாபாபர்வம் அக்ர பூஜை முதலான இடங்களில் உள்ள தாத்பர்யங்களைச் சுருக்கிக் கூறுவதால் அவற்றுடன் பொருளொற்றுமையுள்ளது

ஆக இக்காரணங்களால் ஸஹஸ்ரநாமாத்யாயம் மிகவும் கைக்கொள்ளத்தக்கதாகவுள்ளது. இதெல்லாவற்றுக்கும் மேலாக ஸர்வேச்வரனும், கீதாசார்யனுமான ஸ்ரீக்ருஷ்ணன் கேட்பவர்களுடன் கூடத்தானும் ஒருவனாக உடனமர்ந்து கேட்டான். அதனால் நமக்கு பகவத் குணங்களை உணர்ந்து அனுபவிக்க உயர்ந்த க்ரந்தமாக உள்ளது ஸ்ரீஸஹஸ்ரநாமம்.